பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
13 04 2025 **SUNDAY** 6 30 **PM**
வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்காக பெரிய அளவிலான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

2. நாடுமுழுவதும் அடுத்த இரண்டாண்டுகளுக்குள் 10 லட்சம் கோடி ரூபாய் செலவில் நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

3. பிஜேபி – அஇஅதிமுக இடையேயான கூட்டணி மக்கள் நலனுக்கானது என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

4. தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் மேலும் அதிகரிக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. அயர்லாந்தில் நடைபெற்ற சர்வதேச பில்லியட்ஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>>><<<<<

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்காக பெரிய அளவிலான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

இன்று போபாலில் கூட்டுறவுத்துறை தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

கூட்டுறவுத்துறை நெறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான மாதிரி சட்டங்கள் வகுக்கப்பட்டு, அவற்றை மாநில அரசுகள் பின்பற்றி வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

கூட்டுறவு வங்கிகளின் சேவைகள் அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் மருந்து விற்பனை, குடிநீர் விநியோகம் போன்றவை நடைபெறுவதாகவும் அவர் கூறினார்.

சிறு விவசாயிகள் விதைகளை உற்பத்தி செய்வதற்கு வகை செய்யப்பட்டிருப்பதாகவும், இதற்கென இயக்கம் ஒன்று நடைபெற்று வருவதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>>><<<<<

நாடுமுழுவதும் சர்வதேச தரத்திற்கு இணையாக சாலை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், அடுத்த இரண்டு ஆண்டுகளில் 10 லட்சம் கோடி ரூபாய் செலவில் நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்படவுள்ளதாக கூறினார்.

இதன்மூலம் வடகிழக்கு மாநிலங்கள் பெருமளவு பயன்பெறும் என்றும் திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்.

>>>>><<<<<

சுற்றுச்சூழலுக்கு உகந்த கட்டிடங்களுக்கு கட்டுமானத்துறையினர் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற கட்டுமானம் தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

இயற்கை பேரிடர்களை எதிர்கொள்வதற்கு ஏதுவான கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

கட்டுமானத்துறைக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்றும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

>>>>><<<<<

பிஜேபி – அஇஅதிமுக இடையேயான கூட்டணி மக்கள் நலனுக்கானது என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக அரசுக்கு எதிரான மனநிலை மக்களிடையே ஏற்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இதன் காரணமாகத்தான் மக்களின் கவனத்தை திசைதிருப்பும் நோக்கில், தொகுதி மறுசீரமைப்பு உள்ளிட்ட பிரச்சினைகளை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் எழுப்பி வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளையும் திமுக அரசு நிறைவேற்றவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

மின்கட்டணம் மற்றும் வீட்டுவரி உயர்வு காரணமாக அனைத்து தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளதாக திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

>>>>><<<<<

அஇஅதிமுக – பிஜேபி இடையேயான கூட்டணி, மக்கள் எதிர்பார்த்த கூட்டணி என்று த.மா.கா. தலைவர் திரு. ஜி. கே. வாசன் கூறியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், கவரப்பட்டி கிராமத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த கூட்டணி காரணமாக மக்கள் மகிழ்ச்சி அடைந்திருப்பதாக கூறினார்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளையும் திமுக அரசு நிறைவேற்றவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

மாநில அமைச்சர் திரு. பொன்முடி சர்ச்சைக்குரிய வகையில் பேசியது ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் குறிப்பிட்டார்.

திரு. பொன்முடியை அமைச்சர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்றும் திரு. ஜி.கே. வாசன் வலியுறுத்தினார்.

>>>>><<<<<

விசைத்தறி நெசவாளர்களின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர தேவையான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. முத்தரசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த விசைத்தறி நெசவாளர்கள் ஊதிய உயர்வு கோரி, கடந்த 11ஆம் தேதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்பிரச்சினையில் தமிழக அரசு உடனடியாக தலையிட்டு உரிய தீர்வினை காண வேண்டுமென்றும் திரு. முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

மருந்து துறையில் நேரடி அந்நிய முதலீடு கடந்த நிதியாண்டில் டிசம்பர் மாதம் வரை 11 ஆயிரத்து 888 கோடி ரூபாயை எட்டியதாக மத்திய அரசு கூறியுள்ளது.

உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் மருந்து துறையின் வளர்ச்சிக்கு உதவியதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<<

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணியில் திகழ வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக தகவல் தொழில்நுட்பத்துறை செயலர் திரு. கிருஷ்ணன் கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக தெரிவித்தார்.

இந்த தொழில்நுட்பத்தை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகள் அதன் வளர்ச்சிக்கு தடையாக இருக்காது என்றும் திரு. கிருஷ்ணன் தெளிவுபடுத்தினார்.

>>>>><<<<<

தமிழகத்தில் கோடை வெயிலின் தாக்கம் மேலும் அதிகரிக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 49 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, குற்றால அருவியில் குறைவான நீர்வரத்து இருந்தபோதிலும், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்தே காணப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செந்தில் 47 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

விருதுநகர் மாவட்டம், காரியபட்டி ஒன்றியத்தில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் 3 கோடி ரூபாய் மதிப்பில் தூர்வாரும் பணிகளை மாநில அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

சேலம் அறிவுசார் மையத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<<

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் உள்ள பிரசித்தி பெற்ற முத்தாலம்மன் கோவில் பங்குனி திருவிழாவை ஒட்டி 10 ஆயிரம் பேர் பங்கேற்ற பால்குட பெருவிழா இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

அயர்லாந்தில் நடைபெற்ற சர்வதேச பில்லியட்ஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இறுதிப்போட்டியில் இங்கிலாந்தின் **David Causier,** பங்கஜ் அத்வானியை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>><<<<<

உலக கோப்பை துப்பாக்கி சுடும் போட்டி, பெருவின் லிமாவில் இன்று தொடங்குகிறது.

வரும் 22ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் மனுபாக்கர், சவ்ரப் சௌத்ரி, வருண் தோமர் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

>>>>><<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி வெற்றிபெற 174 ரன் என்ற இலக்கினை ராஜஸ்தான் நிர்ணயித்துள்ளது.

ஜெய்ப்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற பெங்களூரு அணி முதலில் பந்து வீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த ராஜஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 173 ரன் எடுத்தது.

**>>>>>END<<<<<**